முருகப்பெருமான் துணை

**மகான் கஞ்சமலைச்சித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.10.2022**, புதன்கிழமை

1. ஞானச்சுடரெனும் பிரணவசக்தி
   ஞானிகளை வணங்கி மக்கள்
   ஞானமாக அடைந்து தேறிட
   ஞானியாக அருளும் அரங்கனே
2. அரங்கனே உன் அனுகூலம்பெற
   அருளுவேன் சுபகிருது தரிவை திங்கள்
   வரங்களென மூவாறு திகதி புந்திவாரம்
   (சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 18 ம் நாள், 05.10.2022 புதன்கிழமை)
   வையகத்தில் அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை கஞ்சமலைச்சித்தர் யானும்
   அருளுவேன் உலகோர் நலம்பெற
   வாசிவென்ற ஞானிகள் படை
   வரம் தந்து அரங்கனுடன் அருள
4. அருள்தரும் பிரணவக்குடிலை
   அரங்கன் வாழ் ஞானக் குடிலை
   பொருள்பட அனுகி உலகோர்
   புண்ணியபலம் காண தருமவழி
5. தருமவழிதனில் பொருளுதவி செய்து
   தவபலம் கிட்டும் வண்ணம்
   ஆறுமுக அரங்கன் கரம்பட
   ஆற்றல் தரும் மகாமந்திர தீட்சை
6. தீட்சை பெற்று வணங்கிட
   தொடர்ந்து வந்து அரங்கனின்
   தீட்சைபலம் அடைந்து விட
   தெரிவிப்பேன் வரும் அன்பர்கட்கு
7. அன்பர்கட்கு ஞானமும் தவமும்
   அளவிலா தருமபலமும் கூடியே
   இன்பமுள ஞானிகள் ஆசிபட
   எல்லா வரமும் கிட்டித் தேறுவர்
8. தேற்றம் தரும் மகா சக்தியும்
   தெய்வீகமான கலியின் சூட்சும
   மாற்றம் தரும் மகா ஞானியும்
   மாதவசி அரங்க மகானே
9. மகான்களாக மகத்துவம் காண
   மக்களெல்லாம் அரங்கன் வழி
   வகைவகையாக பிரணவக்குடிலை
   வந்தனுகினாலே போதுமப்பா

10. அப்பனே அவரவர் வாழ்விலும்
அனுகிடும் நல்வினை பெருக்கம்
சுப்பிரமண்யர் அருளாக அனுகி
சூட்சும சக்திபல கிட்டி

11. கிட்டியே கலியிடரை வெல்லும்
குறைவிலா ஞானிகளாகி
தட்டாது உலகமாற்றம் தரும்
தவராஜனின் சக்திகளாவர்

அனுகூல ஆசி முற்றே

–சுபம்–